
இலவச காலாண்டு சமய இதழ்

AKARATHEEPAM



# அகர தீபம்

WWW.AKARAM.EU 14.04.2015 - 13.07.2015




மாலை: 02 - மலர்: 01

திருவள்ளுவர் ஆண்டு 2046

# நுழைவாயில்...

ஆன்மீக அன்பர்களுக்கு வணக்கம்,

ஆன்மீக அறிவை இழந்து உலக மயக்க மாயைகளில் சிக்கிக் கிடக்கிறது மனித இனம். இதனால் மிஞ்சிக் கிடப்பது போர், பஞ்சம், பிணி, அடக்கு முறை அதிகார வன்முறைகள். இவற்றின் பின் விளைவுகளாக மக்கள் போராட்டம், அவற்றைப் பயங்கரவாதம் என முத்திரை குத்தி அதிகார வர்க்கம் நடத்தும் பயங்கரவாதத்திற்கு எதிரான அரச வன்முறைகள்.

இப்படி நான்கு புறமும் மக்கள் வன்முறைகளாலும் அதிகார முறைகேடுகளாலும் அவதிப் பட என்ன காரணம்? எல்லாம் தலைவிதி என பேசாது இருந்துவிடலாமா? மதங்கள் அப்படித்தான் மக்களின் நீதிக்கு எதிரான போராட்டங்களை ஆட்சியில் உள்ளர்களுக்கு ஆதரவாக ஆன்மீக போதனை செய்து அநீதிக்கும் அதர்மத்துக்கும் துணை போகின்றன. இத்தகைய செயல்கள் உண்மையான ஆன்மீகம் ஆகாது ஆன்ம ஈடேற்றத்துக்கும் உதவாது.

எமது தாயக மீட்புப் போரில் மக்களின் ஆதரவு முழுமையாக இடம் பெறாத வகையில் எமது இன அழிப்பைச் செய்த அரசுகளும் அமைப்புகளும் கோயில் களையும் திருவிழாக்களையும் கலாச்சார இலக்கிய மாநாடுகளையும் நடத்த ஊக்கம் அளித்து எம் மக்களையே இன அழிவுக்கு மறைமுகமாகத் துணை போக வைத்தன. இப்போதும் ஐ.நா. விசாரணையைக் கூட தடுக்கும் அளவுக்கு இவை மறைமுகமாக இயங்கி வருவதையும் காண்கிறோம்.

நாம் போலிகளையும் உண்மைகளையும் பிரித்துப் பார்க்கும் அளவுக்கு உண்மையான ஆன்மீக அறிவைப் பெறுவது அவசியமாகும். வெறும் கோயில்களைக் கட்டி திருவிழாக்களை நடத்துவதால் ஆன்மீக அறிவு ஏற்பட்டு விடாது. இன்று நாம் காணும் ஆன்மீகமும் அத்தகைய ஒன்றாகத்தான் உள்ளது.

யாரும் எங்கேயும் எந்த ஒரு சுவாமிக்கும் கோயிலை எவருடைய அனுமதியோ ஆதரவோ இல்லாது கட்டிவிட முடிகிறது. பின்னர் அக் கோயிலைப் பற்றிய கற்பனைகள் கட்டுக் கதைகளை உருவாக்கி மக்கள் மனதில் ஒரு வகையான பய பக்தியை ஏற்படுத்தி மக்களின் பணத்தைப் பறிக்கும் கைங்கரியம் நடக்கிறது.

இத்தகைய ஆலயங்களைப் பயன் படுத்தி இந்தியாவிலிருந்து சோதிடர்களும் மந்திரவாதிகளும் வந்து பணம் கறக்கும் நிலையும் ஏற்படுகிறது. ஏற்கனவே போரின் இழப்புகளால் மன வலியில் தவிக்கும் மக்களுக்கு பனையால் விழுந்தவனை மாடு ஏறி விழக்குவது போன்ற நிலைக்கு உள்ளாக்கப் படுகின்ற நிலை எமது மக்களுக்கு ஏற்படுகிறது.

இவற்றை மக்களுக்குப் புரிய வைப்பதும் உண்மை ஆன்மீக அறிவை வளர்ப்பதும் அகர தீபம் தனது தலையாய கடமையாக கொண்டு செயற்பட எத்தனிக்கிறது. உண்மையான ஆன்மீக நிலையங்களாக விளங்கும் அனைத்து ஆலய கர்த்தாக்களும் எம்முடன் இணைந்து ஆதரவு தர அன்போடு அகரதீபம் அழைக்கிறது.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

அகர தீபம்,
ஆசிரியர் குழு



அகர தீபம்

மாலை: 02 - மலர்: 01

**தலைமை ஆசிரியர்:**
த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்:**
ஆதவன்

**ஆசிரியர் குழு:**
வண்ணை தெய்வம்
வியாசன்

**வடிவமைப்பு:**
இ. ஈழமயூரன்

**ஒப்பு நோக்குனர்:**
திரு. செ. அமுதவாணன்

**தொடர்புகளுக்கு:**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: *akaratheepam@akaram.eu*

**www.akaram.eu**

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY
HOLLAND, SWEDEN, ITALY, CANADA

©ETU e.V. 2014. All rights reserved.



# பரந்தாமனின் பத்து அவதாரங்கள்

## நரசிம்ம அவதாரம்

தன் தம்பி இரண்யாட்சன் வராகமூர்த்தியால் கொல்லப்பட்டான் என்பதை அறிந்த இரண்யகசிபு கொதித்தெழுந்தான். தேவர்களுக்கு பரந்தாமன் துணையாக இருப்பதால், அவரைக் கொன்று விட்டால், தேவர்களை இலகுவாக வெல்ல முடியும் என்று தீர்மானித்தான்.

தேவர்களுக்கும், பரந்தாமனுக்கும் பலத்தை அளிப்பது பூலோகத்தில் நடத்தப்படும் யாகங்கள்தான் என்பதை அறிந்த இரண்யகசிபு, எங்கெங்கு யாகங்கள் நடத்தப்படுகின்றனவோ, அந்த இடங்களை எல்லாம் நாசமாக்கினான். முனிவர்களை அடித்து வதைத்தான்.

இதனால், தேவர்கள் அனைவரும் அவதியுற்று, பூலோகத்தில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார்கள்.

இரண்யகசிபு பிரம்மனை நோக்கி நீண்டகாலம் தவமிருந்து, எவராலும், எந்த ஆயுதத்தாலும், பகலிலும், இரவிலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்று வரம் கேட்டான். பிரம்மனும் வரம் அளித்தார்.

இரண்யன், ஆணவம் மிகுந்து, தேவர்களையெல்லாம் அடிமைகளாக்கி, மூன்று லோகங்களையும் ஆட்சி செய்து வந்தான்.

தேவாதி தேவர்கள் எல்லாம் அவனுக்கு அடிபணிந்து வாழ்ந்தார்கள். துன்பத்தைத் தாங்க முடியாமல், தேவர்கள் அனைவரும் பரந்தாமனிடம் முறையிட, அவர் வெகு விரைவில் இரண்யனைக் கொன்று, அவர்களைக் காப்பாற்றுவதாக அருளினார்.

தேவேந்திரன் இரண்யனைப் பழிவாங்க

நினைத்து, இரண்யனின் மனைவி கருவுற்றிருந்தபோது அவளைச் சிலகாலம் ஆசிரமத்தில் வைத்து, நாரதர் மூலம் பரந்தாமனின் மகிமைகளை அறிய வைத்தான்.

இதை அவள் வயிற்றிலிருந்த குழந்தையும் கேட்டு, பரந்தாமனின் பக்தனாகியது. அந்தக் குழந்தைதான் பிரகலாதன்.



அனைவரும் இரண்யனையே கடவுளாக வணங்கினார்கள். ஆனால், இரண்யனின் மகன் பிரகலாதன் பரந்தாமனையே எப்போதும் போற்றி வணங்கினான்.

அதைப் பொறுக்க முடியாத இரண்யன், தன் மகன் என்றும் பார்க்காமல் ஆயுதங்களைக் கொண்டு கொல்ல முயன்றான்; தீ மூட்டி அதனுள் தள்ளி விட்டான்; ஆழமான கடலுக்குள் தள்ளினான்; நச்சுப் பாம்புகளை விட்டுக் கடிக்கச் செய்தான். இப்படி எத்தனையோ கொடுமைகளைச் செய்தான்.

ஆனால், எல்லா ஆபத்துகளிலிருந்தும் பரந்தாமன் பிரகலாதனைக் காப்பாற்றினார்.

தன்னை எல்லாத் துன்பங்களிலிருந்தும் காப்பவர் ஹரி என்று அழைக்கப்படுகின்ற பரந்தாமன் தான் என்று பிரகலாதன் கூறினான். அதைக் கேட்ட இரண்யன், அந்த ஹரி எங்கே இருக்கிறான் ? என்று கேட்டான்.

அதற்க்கு பிரகலாதன், எங்கும் நிறைந்துள்ள இறைவன் இந்தத் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்று ஒரு தூணைக் காட்டினான்.

இரண்யன் ஆவேசத்துடன், தன் கையிலிருந்த கதாயுதத்தால் அந்தத் தூணை அடித்தான். அப்போது, ஸ்ரீமந் நாராயணனாகிய பரந்தாமன், சிங்க முகமும், மனித உடலும்கொண்ட நரசிம்ம அவதாரத்தில், தூணைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டார்.

அவரைத் தாக்கப் பாய்ந்தான் இரண்யன். நரசிம்மர் தன் நகங்களால் அவனது வயிற்றைக் கிழித்து, குடல்களை உருவி, மாலையாக அணிந்து கொண்டார்.

பூமியிலும், ஆகாயத்திலும் அவன் உடல் படாமல், தமது மடியில் வைத்துக் கொன்றார். அந்த நேரம் இரவுமின்றி, பகலுமின்றி மாலை வேளையாக இருந்தது.

பரந்தாமனின் பயங்கரமான நரசிம்ம உருவத்தைக் கண்டு, தேவாதி தேவர்கள் எல்லாரும் அருகில் வரப் பயந்து, தூரத்திலிருந்தபடியே வணங்கினார்கள். பக்த பிரகலாதன் அவர் அருகில் சென்று இனிய பாடல்களைப் பாடி வணங்கினான். அப்போது, ஸ்ரீ நரசிம்மர் தமது கோபம் தணிந்து, அனைவருக்கும் அருள் புரிந்து மறைந்தார்.





# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்.

வண்ணை தெய்வம்

இந்து சமயத்தில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் எண்ணிக்கைக்குப் பஞ்சமே இல்லை என்று சொல்லலாம்!. இதில் முருகனுக்கும், அம்மனுக்கும் மட்டும் வெவ்வேறு பெயர்களில் பல ஆலயங்கள் இருக்கின்றன!

காமாட்சி அம்மன், மீனாட்சி அம்மன், காளி அம்மன், கண்ணகி அம்மன், சோலை அம்மன், வாகாளி அம்மன், பத்திரகாளி அம்மன், மாரி அம்மன், ராஜேஸ்வரி அம்மன், புக்கைதின்னி அம்மன், கருமாரி அம்மன், சிவகாமி அம்மன், முத்துமாரி அம்மன் இப்படியாக ஊருக்கு ஊர் இன்னும் பல பெயர்களில் அம்மன் அவதாரம் எடுத் திருந்தாலும் மட்டுவிலில் வெறும் அம்மனாக பக்தர்களால் வழிபடப்பட்ட அம்மன் பன்றித்தலைச்சி அம்மனாக பெயர் பெற்றமைக்கு சுவராஸ்யமான வரலாற்றுப் பின்னணி இருக்கின்றது.

இவ் அம்மன் ஆலயம் 1750 ஆண்டில் திருநாகர் கதிர்காமர் என்பவரால் முற்றிலும் வெள்ளை நிறமுடைய கற்களைக்கொண்டு கட்டப்பட்டதாக ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக பித்தளையால் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சாட்சியாக இருக்கின்றது.

இப்பொழுது ஆலயங்களிலெல்லாம் பூசை நேரங்களில் நாதஸ்வரம் நட்டுவ மேளம் மங்களகரமாக வாசிப்பது போல அன்றைய நாட்களில் எல்லாக் கோவில்களிலும் இந்த

வாத்தியங்கள் வாசிக்கப்படுவதில்லை! ஆலய நிர்வாகத்தின் வசதிக்கேற்ப அவர்களால் ஏற்பாடு செய்யப்படும் வாத்தியங்கள் வாசிக்கப்படும்! அந்த வகையில் மட்டுவிலில் அமைந்திருந்த இந்த அம்மன் ஆலயத்தில் அந்த நாட்களில் பறை மேளம்தான் வாசிக்கப்பட்டது! (இன்றும்கூட கிராமப்புறங்களில் உள்ள சில அம்மன், வைரவர், அன்னமார் போன்ற ஆலயங்களில் பொங்கல் பொங்கி படையல் வைக்கப்படும்போது பறைமேளம் வாசிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.)



இந்த அம்மன் ஆலயத்தில் பூசை நேரங்களில் வழமையாக பறையடித்து வந்த புலைய இனத்தைச் சேர்ந்த அம்மனின் பக்தனொருவன் ஆலயத்தில் பறையடிப்பதைத் தவிர தனது குலத்தொழிலான மிருகங்களை வேட்டையாடி அவைகளுடைய இறைச்சியை விற்பனை செய்து வாழ்க்கையை நடத்துவதையும் வழமையாகக் கொண்டிருந்தான். அன்றைய நாட்களில் பல ஆலயங்களில் வேள்வி என்னும் பெயரில் ஆலயங்களிலேயே ஆடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுப்பது வழமையாக இருந்தாலும் மாடுகளைக் கொல்வதோ, அல்லது மாட்டிறைச்சியை உண்பதோ படு பாதகமான தெய்வ குற்றமாகக் கணிக்கப்பட்டது!

இப்படியான நேரத்தில்தான் வேட்டையாடச் சென்ற இந்தப் புலையன் எறிந்த கூர்மையான ஆயுதம் இலக்குத் தவறியோ அல்லது வேறு மிருகமென நினைத்து எறிந்தானோ தெரியவில்லை அது பசு ஒன்றின்மீது பட்டு அந்தப் பசு அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்துவிட்டது! பசுவை சிவனின் வாகனமாக மட்டுமல்லாது பசு அம்மனின் மறு அவதாரம் என எண்ணி வழிபடுபவர்கள் சைவ மக்கள். இதனை உணர்ந்த அந்தப் புலையன் தான் மகா பாதகமான செயலைச் செய்துவிட்டதாக எண்ணி அம்மன் சன்னிதானத்திற்குச் சென்று அழுது புலம்பினான். பின்னர் அம்பாள் தனக்குத் துணையிருப்பாள் என மனதைத் தேற்றிக்கொண்டு அந்தப் பசுவை ஆலயத்தின்; தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு வயலில் யாருக்கும் தெரியாமல் புதைத்துவிட்டான்.



தனது மாட்டைக் காணவில்லையெனத் தேடி அலைந்த அந்த மாட்டின் சொந்தக்காரன் நடந்த சம்பவத்தை எப்படியோ அறிந்து ஊர்ப்பஞ்சாயத்திடம் நீதி கோரி நின்றான். பசுக்கொலை என்பது சாதரண குற்றம் அல்ல! அந்தக் கொலையைச் செய்த புலையனுக்கு மரண தண்டனைகூடக் கிடைக்கலாம்! என்பதனால் குற்றச்சாட்டிற்குப் பயந்த அந்த அம்மையின் பக்தனான புலையன் தான் தெரியாமல் செய்த குற்றத்திற்காகத் தன்னைத் தண்டிக்கப்போகின்றார்கள்! நீதான் எனக்கு அபயம் அளிக்கவேண்டுமென அம்பாளிடம் மன்றாடியபடியே இருந்தான்.

பஞ்சாயத்து விசாரணைக்கு முதல்நாள் இரவு அந்தப் பக்தனின் கனவினில் முதிய விதவைக்கோலத்தில் காட்சியளித்த அம்பாள் "பக்தா நீ எதற்கும் கவலைப்படாதே நாளைய தினம் நடக்கும் விசாரணையில் நீயோ "நான் கொன்றது பசுவல்ல! பன்றிதான். அதனுடைய எச்சங்களைத்தான் அங்கு புதைத்தேன்" என்று சொல்" எனக்கூறிவிட்டு மறைந்துவிட்டாள்!.



மறுநாள் புலையனும் பஞ்சாயத்தில் அப்படியே சொல்ல, அவன் பொய் சொல்வதாகப் பசுவின் சொந்தக்காரன் வாதாடினான். உண்மையை அறிவதற்காக பசுச் சொந்தக்காரனின் வேண்டுகோளுக்கு இணங்கப் பசு புதைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட அந்த இடம் தோண்டப்பட்டது. என்ன அதிசயம் பசு புதைக்கப்பட்ட அந்த இடத்தில் பன்றித்தலைதான் காணப்பட்டது! அதைக்கண்ட பசுவின் சொந்தக்காரன் ஆச்சரியத்துடன் நிற்க பசுவைப் புதைத்த அந்தப் புலையன் அம்பாளின் மகிமையை எண்ணி மெய்சிலிர்த்து கண்ணீர் மல்கி வாய் குழறியபடி மெதுவாக "பன்றித்தலை காட்டிய அம்பாள்.பன்றித்தலைச்சி அம்பாள்" எனச் சொல்லிக் கொண்டான்.

புலையன்தான் பசுவைக் கொன்றான் எனப் பசுவின் சொந்தக்காரனுக்கு மட்டுமல்ல ஊருக்கும் பஞ்சாயத்திற்கும் நம்பிக்கையாகத் தெரிந்திருந்தாலும் பசு புதைக்கப்பட்ட இடத்தில் பன்றித்தலை கிடைத்தது அம்பாளின் அருள்தான் என அனைவரும் நம்பியதால் அந்தப் புலையனின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளே எல்லோரது வாய்களும் முணுமுணுக்க அன்று முதல் அவ் ஆலயம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் என்றே அனைவராலும் அழைக்கப்படலாயிற்று.

வெறும் அம்மன் ஆலயமாக இருந்த இவ் ஆலயம் பன்றித்தலைச்சி அம்மன் எனப் பெயர் பெற்றது எந்த ஆண்டு என எந்த வரலாற்றுக் குறிப்புகளும் இல்லை!



ஆனாலும் 1946ம் ஆண்டிலேயே முதன் முதலாக இவ் ஆலயத்திற்கு முறைப்படி கும்பாபிஷேகம் செய்யப்பட்டதுடன் அதையடுத்து வந்த மார்கழித்

திருவெம்பாவையில் கொடியேற்றத்துடன் திருவிழாவும் முதன் முதலாக இடம்பெற்றதாகவும். 1952ம் ஆண்டில் இருந்தே அம்பாளுக்கு ஆறு கால நித்திய பூசை நடைபெற ஆரம்பித்ததாகவே வரலாற்றுக் குறிப்புகள் சொல்லுகின்றன.

இவ் ஆலயத்தின் திருவிழா மார்கழித் திருவெம்பாவையையொட்டி நடைபெற்றாலும் பங்குனி மாதத்தில் வருகின்ற அனைத்துத் திங்கட்கிழமைகளும் திருவிழா நாட்களைவிட மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன! பங்குனித் திங்கள்களிலே யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற சைவ மக்கள் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்திற்கு அருகில் உள்ள கேணியில் தீர்த்தமாடி பின் பொங்கலிட்டு அம்பாளுக்கு படையல் வைத்துத் தாங்களே நிவேதித்து வணங்குவார்கள்!.

ஏராளமான மக்கள் பொங்கல் வைக்க வருவதனால் ஆலய முன்றலில் இடம் போதாமையாக இருக்கும். அதனால் ஆலயத்தைச் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் பக்தர்கள் பொங்கலிடும் காட்சி பங்குனித் திங்கள்களில் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். (சில சமயங்களில் மக்கள் அதிகமாக வருகை தந்தால் அருகில் உள்ள வயல்களில்கூட பொங்கல் நடைபெறுவதைக் காணலாம்)

அனேகமான ஆலயங்களில் அந்தந்த ஊர் மக்கள் ஒன்றுகூடி பொங்கல் வைப்பதே வழமையாக இருக்கும்! ஆனால் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மட்டும்தான் சகல ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து ஒன்றுகூடி பொங்கல் வைப்பது இவ் ஆலயத்திற்குரிய மிகப்பெரிய சிறப்பாகும்.

தனது பக்தனுக்கு முதுமையான கிழவியின் கோலத்தில் கனவினில் காட்சி கொடுத்த காரணத்தால் இவ் ஆலய அம்மனைப்பற்றி இவ் ஊர் மக்கள் பேசும்போது கிழவி எனக் குறிப்பிட்டுப் பேசுகி;ன்ற வழமை இன்றும் மட்டுவிலில் வாழ்கின்ற முதியவர்களிடம் காணப்படுகின்றது.

பொங்கற் தலமாகவும், தீர்த்தச் சிறப்பும், மூர்த்திப் பெருமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெருமை இவ் ஆலயத்திற்கு உண்டு என்பதனால் ஊர் கடந்து யாழ் மாவட்டத்தில் உள்ள சிறப்பான பெரிய ஆலயங்களின் வரிசையில் இவ் ஆலயத்தின் பெயரும் இடம்பெறுகின்றது.

சில ஊர்களின் பெயர்கள் அங்குள்ள ஆலயங்களினால் புகழடைந்திருப்பதைப் போலவே பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தினால் புகழடைந்த மட்டுவில் சாவகச்சேரியில் இருந்து புத்தூர் வீதிவழியாக சுமார் மூன்று மைல்கள் தொலைவில் இருக்கின்றது.



# சிவ பூமியும் நாமும்



எமது தாயக பூமியாம் ஈழமணித் திருநாட்டை இலங்கை எனும் தீவை நாலா பக்கமும்; பழம் பெரும் சிவாலயங்கள் அலங்கரித்து நிற்பதை இன்றும் காணலாம். இவ் ஆலயங்களின் தோற்ற காலத்தை அறுதி இட்டுக் கூற முடியாத அளவு வரலாற்றுக் காலத்துக்கும் முற்பட்டவை. எனவே அதற்குச் சிவபூமி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. சிலப்பதிகார நாயகியான மாதவி கோவலன் மகளான மணிமேகலை துறவுக் கோலம் கொண்டு அமிர்த சுரபி என்ற விசித்திரமான கலசத்தோடு வந்து இறங்கிய மணிபல்லவம் என்ற பெயரும் எம் தாய் நாடு பெற்றிருந்தது.

இராமாயணக் காவியத்தில் இலங்கை வேந்தன் இராவணன் ஆட்சி செய்து தசரதன் மகன் இராமனுடன் போரிட்டு மடிந்த பூமி எமது பூமி; அவனது காலத்தில் இருந்தே திருக் கோணேசுவரன் என்ற பெயரோடு சிவன் கோயில் கொண்டிருந்த தேசம் எம்முடைய தேசம். இன்று போலவே அன்றும் காட்டிக் கொடுத்த அவனது ஒரு தம்பியால் எமது தேசம் வெல்லப்பட்டது.

மகா பாரதத்தில் பஞ்ச பாண்டவருள் ஒருவனான அருச்சுணன் நாக இளவரசி அல்லியை மணந்து மகிந்த நாடு என மகாபாரதக் கதையில் எம்நாடு இடம் பெற்றுள்ளது. கிழக்கே திரிகோணமலையில் திருக் கோணேசுவரம் மட்டக்களப்பில் மாமாங்கேசுவரம் தெற்கே தேவேந்திர முனை இன்று தெவி நுவர (தேவர் நகரம்) என்ற இடத்தில் திருத் தொண்டீசுவரம், மேற்கே திரு முன்னீசுவரம் வடக்கே கீரிமலையில் நகுலேசுவரம் மத்தியில் சிவனொளிபாதம் எனப் பழம் பெரும் சிவாலயங்களைக் கொண்டிருக்கும் காரணத்தால் எம் தாயகம் சிவ பூமி என்ற சிறப்புப் பெயரைக் கொண்டுள்ளது.

சிவ வழிபாட்டைப் போன்றே முருக வழிபாட்டின் தோற்று நிலமாக கதிர்காமம் அறியப்படுகிறது. சிவனும் முருகனும் தமிழரின் கடவுளர்கள் என்பதற்கும் அப்பால் தமிழையும் சைவத்தையும் முத்தமிழ்ச் சங்கத்தின் தொடக்க சங்கமான முதல் சங்கப் புலவர்களாக இருந்து தமிழை சிவனும் முருகனும் வளர்த்தனர் என்ற இலக்கிய சான்றுகளும்

உண்டு. ஆனால் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் வெளி நாட்டவர் அதிகார பலத்தினால் எமது தாயகத்தின் சிவன் இராமேசு வரத்துக்கும் காசிக்கும் கைலைக்கும் கொண்டு சென்று குடியமர்தப்பட்டு விட்டான்

முருகனோ ஆறு படை வீடு என்றும் தெய்வானையின் கணவன் காதலி வள்ளியை சின்ன வீடு எனவும் தமிழகத்தின் 7 தலங்களில் குடிமர்த்தப் பட்டு இவர்கள்; இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் ஆக்கப்பட்டு விட்டனர். சென்ற நூற்றாண்டு வரை சிவ பூமி என அறிப்பட்ட ஈழ தேசம் 2009 முதல் பௌத்த பூமியாக்கப்பட்டு வருகிறது. கந்தபுராண பாரம்பரியம் என அறியப்பட்ட யாழ்ப்பாணம் காடையர் புராண தேசமாக காட்சி அளிக்கிறது.

இத்தனை துயர துன்பங்கள் இடர்களுக்கு மத்தியிலும் சில உள்ளங்கள் அங்கே சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்க்கும் பணிகளைச் செய்து வருவதை அகரதீபம் வரவேற்று பாராட்டிப் பணிந்து போற்றுகிறது.

சென்ற 31.07.2015 முதல் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இலங்கை இந்து மாமன்றம் தனது 60வது வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக 3 நாள் ஆராய்ச்சி மாநாட்டை சைவ தமிழ் அறிஞர்களை கொண்டு நடத்தியது சைவ ஆன்மீக உலகம் முற்றாக இருளில் மூழ்கி விடவில்லை என்பதை உலகுக்குப் பறைசாற்றி இருக்கிறது.

புலத்தில் வாழ் சைவ இந்து ஆலயங்களும் அவற்றின் ஆதீன கர்த்தாக்களும் இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து செயற்படும் நிலையை உருவாக்க வேண்டும் என அகர தீபம் பணிவோடு அழைப்பு விடுக்கிறது. எமது இனம் மொழி மத பிரதேச வேறுபாடுகளால் சிதைவுண்டு நிற்பதால் எங்கேயும் எமது பலத்தையும் திறமைகளையும் பெருமைகளையும் எடுத்துச் செல்லத் தவறிவிடுகிறோம்.

எமது அகதி நிலை மனப்பான்மையை அகற்றி உறுதியான அடுத்த தலைமுறையை வழிப்படுத்த அரசியல் மொழி மத கலாச்சார பிணைப்புகளை எமது தாயக பூமியுடனும் உறவுகளுடனும் வலுவாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை அங்கு அண்மையில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் எச்சரிக்கை செய்துள்ளன. நமது அடுத்த தலைமுறையை தொலைந்து போக விடாது தடுக்க இந்த தாயக உறவு அவசியமாகிறது. மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.



# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

ஐரோப்பபா மண்ணிற் சிறந்த அழகுநிறை பசுமைதரும் மலைகள் நிறை அழகிய நாடு சுவிற்சர்லாந்து. இங்கே இருக் கக்கூடிய தலைநகர்ப் பட்டினமாகிய பேர்ன் பெருநகரத்திலே, நடுநாயகமாக விளங்கும் அருள்ஞானாம்பிகை உடனாய அருள்ஞானலிங்கேச்சுரம் 1994ம் ஆண்டு முதல் பக்தி மன்றமாக இயங்கி வரும் சைவநெறிக்கூடத்தின் முயற்சியால் இறையருள்கூடி 2007ம் ஞானலிங்கேச்சு ரம் முழுமுதற்கடவுள் சிவ பெருமான் உலகம்மை ஞானாம்பிகையுடன் எழுந்தருளும் திருக்கோவில் அமைந்தது.

சைவநெறிக்கூடத்தின் நோக்கம், அன்பு வழி சைவசமயத்தினை, வாழும் நாட்டின் சூழலிற்கமைய, இடைச் செருகல்கள் நீக்கச் சீர்திருத்தத்துடன், வாழத்தக்க வகையில் இளந்தமிழ்ச்சமூகத்திடம் சைவசமயத்தினை வழங்குவதாகும். சைவநெறிக்கூடம் சித்தர்வழிபாடு பரப்ப ''சிவஞான சித்தர்பீடம்'', அற்றார் பசி அழித்துச் சிவதொண்டு ஒழுக 'சிவபணிநிலையம்', அடியார்கள் சிவசீலம் புரியத் ''திருத்தொண்டர் சபை'', செந்தமிழ் திருமறை வழிபாடு யாவரும் ஒழுக ''தமிழ் வழிபாட்டுப் பயிற்சிக்கூடம்'' ஆகிய கிளை அமைப்புகளைத் தோற்றுவித்து தன் பணி தொடர்கிறது. மேற்காணும் நோக்கினை வாழ இறையருளால் கை கூடியது கருவடிறியில் தாய் மொழியில், அனைவரும் சைவசமயம் ஒழுகி கருவறைவரை சென்று வழிபடும் ''அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்'' ஆகும்.

அனைத்து உயிர்களின் தலைவன், ஞானலிங்கப்பெருமானதும் பெருமாட்டியினதும் பேரருள் நிறைந்து கடந்த 01. 02. 2015 முதலாவது தமிழ்த் திருக்கோவில் திருக்கோபுரத்துடன் சுவிஸ் நாட்டின் தலைநகரில் நடுநாயகமாக எழுந்து செந்தமிழ்த்

திருமறையில் திருக்குடமுழுக்குக் கண்டிருந்தது.
இதனைத்தொடரந்து சுவிசின் மேற்கில் நாற்றிசையும் மலைசூழ நீரேரி நிறைந்து வழியும் வலே மாநிலத்திலும் திருக்கோவில் கொண்டெழ திருவருள் நிறைத்து காதன்மை (மன்மத) ஆண்டு, திருவள்ளுவர் ஆண்டு 2046ம் ஆடவைத் திங்கள், 7ம் நாள் (21. 06. 2015, ஞாயிற்றுக்கிழமை) திருநாள் நாயகன் சூழந்து காக்க, அரவு (ஆயிலியம்) கழியக் கொடுமுகம் (மகம்) முதற்கோள் வரவுசெய்ய, பகல் நாளிகையும், ஞாயிறவன் ஓரையும் சூழ்ந்து பரந்து ஒளிபரப்பக் செந்தமிழ்க் குருமார்களால், செந்தமிழ்த் திருமறையோதி, சித்தர்கள், முனிவர்கள், யோகிகள், திருமலர்தூவ ஞாயிறவன் திருவோரையில் 2வது திருக்கோவிலில், ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரரிற்கு செந்தமிழ்த் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா இனிதே நடந்தேறியது.

திருப்பணி செய்வதென்பது, சொற்களால் அல்லது எண்ண அலைகளால் எழுவது அல்ல. கோடான கோடி நல்வினைப் பயன்களும், முழுநிறை முழுமுதற்கடவுள் நல்லாசியும் நிறைவுக ண்டால் மட்டுமே திருக்கோவில் எழுப்பமுடியும். அவ்வகையில் தானாகத் தானே தோன்றியாக, தானே தன்னால் உருவாகி வளர்ந்து, தனக்கும் பிறர்க்கும் செயற்பாலன செய்து சிறப்புறுவதாகும். அவ்வழியே தானாக சிவதொண்டர்களை சிவசிந்தனையாளர்களை அன்புவழிச் சைவமான சைசமயத்தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர் எண்ணத்தில் சித்தத்திலே புனிதமான விதைகளை வித் திட்டு, ஆணிவேராக ஊன்றி, சிறுமரமாகி வேரூன்றி, விழுதெறிந்து பெருமரமாக, பூத்துக் குலுங்கி, சுவிஸ்நாட்டில் அருளா ட்ச்சி நடாத்துகின்றது ஞானலிங்கேச்சுரம். இப்பெரும் மரம் தனாகத்தோன்றிய திருவருள்மரமாகும். காலாம் அற்ற காலத்திற்கும் முழுமுதற்கடவுளர் இங்கு உறைந்து அவர்களின் குழந்தைகளாகிய மானித குலத்திற்கு அனைத்து வழங்களையும், செல்வம், நெல், நல்நூல், திருக்குல வளர்ச்சி, கல்வி, கலை வளர்ச்சி, உடல்; நலவளர்ச்சி, எனப் பல் ஈடுகளையும் திருச்செல்வங்களையும் வாரி வழங்க சுவிற்சர்லாந்து தலைநகரில் நிலையாகத் திருக்கோவில் விளங்குகிறது.

சிவபுராணச் செய்தியிலே சூதமாமுனிவர் குறிப்பிட்ட செய்திகளை இங்கே மீளவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்: சிவபெருமானிற்கு யார் சிவன்கோவில் எழுப்புகிறார்களோ, சிவபெருமானை வழிபடுகிறார்களோ, அவர்கள் நாளும் இறைவனை வழிபாடு செய்தால் கிடைக்கும் பெறுபேற்றினை அடை கின்றான், அத்துடன் அவர்கள் குலத் தில் வாழ்ந்த நூறு தலைமுறையினர் சிவலோகம் செல்வர். ஒருவர் மனத்தால் கோவில் அமைக்க நினைத்தாரே ஆயின், ஏழு பிறவிகளிலும் செய்த தீவினையில் இருந்து விடுபடுவர். திருக்கோவில் கட்டி முடித்தாரே ஆயின், அதில் உள்ள கற்கள் ஒவ்வொன்றின்றிற்கும், ஒவ்வொரு ஆயிரம் வருடம் சிவனடியில் இருக்கும் அருளினைப் பெறுவர். சிவலிங்கத்தினை உருவாக்கியவர் சிவ உலகில் அறுபதாயிரம் ஆண்டு கள் இருப்பர். அவரது தோன்றல்களும் சிவ உலகை அடையும் நல்வினை அடைவர். சிவலிங்க அறங்காவல் செய்ய எண்ணியர் எட்டுத் தலைமுறைக்கு தன் முன்னோரையும் சிவ உலகம் அடையச் செய்வர். சிவனடியார்களை பாசக் கயிறுகொண்ட காலன் எக்காலத்திலும் நெருங்கக்கூடாது என்பது அயன் வாக்கு. இவை சிவபுராண வரலாறாகும்.



ஆகவே அங்கிங்கெண்ணாதபடி எங்கும் நிறைந்த ஆனந்தப் பெருஞ்சோதி ஒளிவடிவாக, அகண்ட உலகெல்லாம் அருளாட்ச்சி செய்கின்ற பெரும் உலக நாயகி, திருச்சாந்த உருவிற்குக்காரணமான பேரரசி பெருந்தேவி ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான் திருக்கோவில் சிவப்பரம்பொருளாக ஐரோப்பாத் திடலிலே பல்சமயங்களுக்குமாக அமைந்த பெரும் மாளிகையில் நடுநாயகமாக இராசகோபுர அழகுப்பொலிவுடன் மிளிர்ந்து 01. 02. 2015 திருக்குட நன்னீராட்டு பெருவிழா கண்டு, அதே பெருமான் 21. 06. 2015 வலே மாநிலத்தில் உள்ள மர்த்தினியில் தமிழ்த் திருமறைக்கு வரமாக வலே மாநிலத்திலும் அருள்கிறான்.

2016ம் ஆண்டு ஈழத்திலும் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் அமையவிருப்பது சிவபெருமான் அருளாகும்.

எம் உயிரின் நாயகர்களாகவும், குருவருளாகவும், திருவருளாகவும், நிறைந்து இருக்க இறையை இறைஞ்சி ஞானலிங்கப்பெருமான் அடியார்கள் யாவரும் எண்ணியது ஈடேறவும், ஞானலிங்கேச்சுரம் எழுப்புவதற்கு உறுதியோடு இருந்தவர்களையும், நலம்பெற வாழ்த்தி இறையாளர்கள், செந்தமிழ் நாயகர்கள், சிவவாழ்வுச் சித்தர்களை வேண்டி அமைகிறோம்.

பேரன் - அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் காதன்மை ஆண்டுத் திருவிழா, 20. 08. 2015 வியாழக்கிழமை முதல் 01. 09. 2015 செவ்வாய்க்கிழமை வரை.

உலகிற்கு ஒருவனாய் நின்ற ஞானலிங்கப்பெருமான் இணையடி

தொழுது, ஞானலிங்கேச்சுரம் சுவிற்ச ர்லாந்து நாட்டில் இனிதே அமைய வழிசெய்த அனைத்து அடியார்களையும் நாம் பெருமான் இணையடி தொழுது வணங்குகிறோம்.

செந்தமிழ்த் திருமறை தெள்ளமுது ஆகிச் சிவசிந்தனை ஊற்றாகப் பெருக்கெடுக்க, உள்ளம் மெய்ப்பட, எம்பெருமான் திருப்பெயர் நாளும் துதித்து, அம்பலத்துப் பொன்னம்பலவன் பேர்ன் நகரில் பிறவித் துன்பத்தில் நாம் மீண்டும் பிறந்து தவிப்பதைத் தடுக்க பெருந்தேவி பேரரசி அருள்ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமானாக எழுந்தருளி திருக்கோவில் கண்டு அவனருளாலே அருளியுள்ளான். தமிழ்பாடும் நால்வரும் விண்முட்டும் திருக்கோபுரத்தில் பெருமானைப் பாடித்துதிக்க, செந்தமிழ் அடியார்கள் அளித்த நன்கொடையில் ஏழு மாதங்களில் திருக்கோவிற் திருப்பணி நிறைவுற்று, தமிழ்கலைக் களஞ்சியமாக ஞானலிங்கேச்சுரம் திகழ்வது, அடியார்கள் அளித்த கொடையும், சித்தர்கள், யோகியர், ஞானியர், இறையாளர்கள் அளித்த நல்லாசியுமாகும்.

ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில், ச ம ய ப் ப ணி க ளு ட ன் சமூகப்பணிகளையும் நிகராக நோக்குகிறது. அனைத்தையும் இழந்து நாம் எம்முடன் எடுத்துவந்தது, எமது அடையாளமும் சமயப் பண்பாடும் ஆகும். இதனை நாம் எமது இளந்தமிழ்ச் சமூகத்திற்கு வாழத்தக்கவகையில் சீர்திருத்தத்துடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

திருப்பணி கண்டு நிறைந்த ஞானலிங்கேச்சுரம் முதலாவது திருவிழாவை திருக்கொடியேற்றத்து டன் சைவத்தமிழ்ப் பக்தி எழுச்சி காணும்வேளை

திருவருள்கூடிய நற்பெரும் வேளை,
சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்!

எனும் தமிழ்ப்பாட்டி ஔவை மொழி உணர்ந்து விதியை மதியால் வெல்ல பேர்ன் ஞானலிங்கப்பெருமான் திருவிழா கண்டு என்றும் நீடு நற்பெருஞ் செல்வங்களுடன் நிறைந்து யாவரையும் உள்ளன்புடன் அழைக்கின்றோம்.

உலகு படைத்த முதல்வன் கோவிலில்
குலவு ஒரு குலம் தமிழ்க்குலம்
இறைவன் முன் யாவர் நிலையும்
ஒரே ஈடுநிலையே - யாவரும் சமமே

திருப்பணிகள் நிறை உண்டு, இணைந்து தொண்டற்றா யாவரையும் அழைக்கின்றோம்.

விளங்குக சைவநீதி உலகமெலாம்.
சைவநெறிக்கூடம் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில், சுவிற்ச ர்லாந்து.

தபால் கணக்கு இல.:
Postfinance 30-468890-2

கணக்குரிமை:
Verein SAIVANERIKOODAM,
Laubeggstr.21, 3006 Bern, Switzerland
வங்கி/ Bank: Credit Suisse, 3001 Bern
கணக்குஇல / Konto: 771 606 - 21
IBAN: CH26 0483 5077 1606 2100 0
BC Nr: 4835



# அறிவோம் ஆன்மீகம் -1

அவன் இன்றி அணுவும் அசையாது என்பது சைவப் பெருமக்களின் மிகச் சிறந்த ஆன்மீக தத்துவம். அந்த அவனை அவன் அருளாலே அவன் தாளை (பாதங்களை) வணங்கியே அறிந்து கொள்ள முடியும். அந்த அவனுள் அவளும் இருக்கிறாள் என்ற அடிப்படை ஆன்மீக தத்துவத்தையும் எமது சைவ நெறியே கூறி இருக்கிறது. அப்படிப் பட்ட அவனும் அவளும் அனைத்து உயிர்களிலும் உயிருக்கு உயிராக சிவம் உறைகிறான். இந்த அறிவைப் பெறும் ஆற்றல் மனித மனத்துக்கு மட்டுமே இருக்கிறது.

அவனும் அவளுமாக அம்மை அப்பனாக எமது உள்ளத்தில் இருக்கிறான். எமது தாய் தந்தையாக எம்மோடு உலகில் வாழ்ந்து வழி நடத்தி நற்பேறு பெற சிவனே உதவுகின்றான். இவை அனைத்தும் எமது முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளுக்கு அமையவே இப்பிறவியில் நமக்கு கிடைக்கின்றன.

எனவே எம்மை விட மற்றவர் சிறப்பாக வாழுகிறார்கள் எனக் கருதி உள்ளம் வெதும்பி தீய வழிகளில் வாழ்ந்து பாவங்களைச் செய்யாமல் எல்லாம் சிவன் அருள் என அறவாழ்வு வாழ்ந்து இப்பிறவியை முடித்தலே சிறந்த ஞான மார்க்கம் ஆகும்.

எனவேதான் சைவத்தை ஒரு மதம் எனச் சொல்லாமல் வாழ்வின் தத்துவமாக சிவநெறி என கூறப்படுகிறது. சிவநெறி என்பது ஒரு அறவாழ்வு வாழும் வழி.

எமது தாய் தந்தையரைப் போற்றிப் பணிந்து வாழ்தல் ஒன்றே சிவ வாழ்வு அற வாழ்வு ஆகும். மனதார அவர்களின் பாதங்களைப் போற்றி வணங்கி வழ்வதே எமது இல்லற தர்மம். அந்த வழியில் பெறும் அனுபவமே சிவ

அனுபவம். உண்மை அறிதல், மெய் நெறி, ஆன்மீக அறிவு அல்லது ஞானம் என்பர். இத்தகைய மெய் நெறி அறிந்து அவ்வழியில் வாழ்வதே அற வாழ்வு.

அந்த அறிவை மிக இலகுவாகப் புகட்டி மறைந்தவர் எமது தமிழ் மூதாட்டியான அவ்வைப் பிராட்டியார் ஆவார். எது பெரியது என்ற கேள்விக்கு இந்தப் பூமி பெரியது. பூமியோ நான்கு முகங்களைக் கொண்டிருந்த நான்முகன் பிரமனின் படைப்பு. அந்தப் பூமியோ ஆதிசேடன் எனப்படும் பாம்புக்கு ஒரு தலைப் பாரம் அளவு. ஆதி சேடனோ உமையின் கால் சிறுவிரல் மோதிரம் உமையோ சிவனின் ஒரு பாதி. அந்தச் சிவனோ அவனை வணங்கும் அடியாரின் உள்ளத்தில் உறைகிறான்.

எனவே இவ்வளவையும் தனது உள்ளத் தில் அடக்கி வைத்திருக்கும் சிவ அடியவரின் பெருமையைக் கூறவும் முடியுமோ என வியந்து எமது அறிவை வழிப்படுத்தி விழிப்படைய வைக்கிறார். அப்படி இறைவன் இருப்பதை அறிதலும் உணர்தலும் அதன்படி அவன் வழியில் வாழ்தலுமே ஆன்மீக வாழ்வு. அத்தகைய ஆன்மீக வாழ்வை வாழ்வதே பேரின்பம் சொர்க்க சுக போக வாழ்வு எல்லாமும்.

ஆனால் கள்ள மனத்தோரும் கபட தாரிகளும் பல்வேறு ஆடம்பர விழாக்கள் கேளிக்கைகள் மூலம் மக்களின் மனதை புலன்வழி போக வைத்து ஏமாற்றிப் பணமும் பதவிகளும் பகட்டான வாழ்வும் அனுபவித்து வருகின்றனர். இன்று நாம் காணும் பல்வேறு ஆலயங்களும் மத விழாக்களும் வணிக வர்த்தக சுய விளம்பர மோகம் கொண்டவையாகவே காட்சி தருகின்றன.

இவைகள் மூலம் அன்பு கருணை ஆன்மீக போதனை எவையுமே மக்களுக் குக் கிடைப்பதில்லை. மாறாக மனங்கள் புலன்வழி இன்பங்களை நாடச் செய்து பொய், கொலை. களவு. கள்ளு. காமம் என்ற பஞ்ச மா பாவங்களையும் செய்யத் தூண்டுவதே இவற்றின் பெறு பேறாக இருப்பதைக் காண்கிறோம்.



பட்டாடை இல்லாத கோயில் திருவிழாக்களைக் காண இயலாது. சுவாமி உருவங்களில், பூசை ஆசாரிகளில், பக்த கூட்டத்தில் பெண்களின் ஆடைகளில் பள பளக்கும் பட்டு கண்களைப் பறிக்கும் நிறங்களில் கண்களுக்கு விருந்தாக விளங்கும் பட்டாடைகளே தெரிகின்றன. இவற்றில் பலியாகிப் போன பட்டுப் புழுக்களி;ன் எண்ணிக்கையோ பல ஆயிரம் கோடி என்பதை சிந்திப்பவர் எவருமே இல்லையே.

கோயில் விழாவோ விரத நாளோ உதட் டுச் சாயம் முக அலங்கார மைகள் பூசிய பக்தைகள் கூட்டம் அலைமோதும். அவர்களி;ன் மயக்கத்தில் அலைமோதும் ஆண்களின் உணர்வுகள். கண்களின்

மூலம் காமமும் பொறாமையும் மனங்களில் பல தீய எண்ண அலைகளின் எழுச்சியும் ஏற்பட இத்தகைய ஆலய திருவிழாக்கள் இடம் தருகின்றன. இத்தகைய அழகு சாதனங்களின் தாயாரிப்புகளில் குறிப்பாக உதட்டுச் சாயங்களில் பிற உயிர்க் கொலையும் அவற்றின் உடலில் இருந்து பெறப்படும் பொருட்களும் அடங்குகின்றன.

உயிர் வதை கூடாது எனப் போதிக்கும் மத விழாக்களில் கூட இத்தகைய பாவ காரியங்கள் காரணமாக அமைய எமது ஆலயங்கள் இருப்பதால் இவற்றை எப்படி ஆன்மீக தலங்களாக ஏற்க முடியும் என யாரும் கேட்பது கிடையாது. ஏன் என்றால் அதற்;குப் போதிய ஆன்மீக அறிவும் இல்லை அதனைத் தேடும் ஆர்வமும் பலரிடம் கிடையாது.

இன்று இக்குறைகளை அறிந்து செயற்படும் ஆலய நிர்வாகங்களும் மிகஅரிதாகவே உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் அவற்றால் ஆன்மீக போதனையும் செய்ய முடிவதில்லை. செய்ய முடிந்தாலும் அவற்றை காதில் வாங்கி ஆன்மீக ஈடேற்றம் பெற இன்றைய உலக வாழ்வியல் இடம் தருவதும் இல்லை.

இப்படிப் பட்டவர்களுக்கு என்ன முடிவு என்பதை எமது திரு மூல நாயனார் கூறிப் போன வரிகளை நினைவுக்கு கொண்டு வருவது தேவையாக உள்ளது. இதோ அவரது வரிகளைப் படித்துப் பாருங்கள்-

கொலையே களவு கள் காமம் பொய் கூறல்
மலையான பாதகமாம அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து இன்பம்
சார்ந்தோர்க்கு இலையாம் இவை
ஞானானந்து இருத்தலே.

ஞானம் எனும் ஆனந்தப் பெருங்களிப்பில் இருந்து மகிழ்வதற்கு கொலை களவு கள் காமம் பொய் பேசுதல் என்ற ஐந்து கொடும் பாவங்களைச் செய்யாது இருத்தலே போதும். அப்படியான தூய வாழ்வு வாழுவோருக்கு ஞான வாழ்வைத் தேட வேண்டிய தேவையே இல்லை என்கிறார்.

எமது ஆலயங்கள் இத்தகைய வழியில் மக்களை வழி நடத்த முன்வரவேண்டும் என அகர தீபம் அழைக்கிறது.





# பகவத் கீதை - மனித தர்மங்களின் விளக்கம்

கடவுள் அருள் என்பது அவரவருக்கு ஏற்படும் அனுபவத்தின் வாயிலாக உணரப்படுவது. பலருக்கு இறைவன் நேரடியாகத் தோற்றமளித்து அருள்பாலிக்கும் அற்புதங்களும் நிகழ்வதுண்டு. மனித உருவில் இறைவன் வந்து துயருற்ற மக்களுக்கு உதவிடும் சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. அசரீரியாகப் பலருக்கு இறைவனின் அருளாசி ஒலிக்க, அதற்கேற்பத் தன் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்துக் கொண்ட பக்தர்களும் உண்டு. சிந்தித்துப் பார்ப்போமானால், அடிப்படையில் விசால குணம் படைத்த மக்களே இதுபோன்ற அற்புதங்களால் ஆட்கொள்ளப்படுகிறார்கள் என்பது புரியும். பிரச்னையிலும் துன்பத்திலும் உழலுபவர்கள், அந்த நிலையிலும் மனதைத் தளரவிடாமல் இறைசக்தியே நம்மை மீட்கும் ஒரே பற்றுக்கோல் என்பதை பரிபூரணமாக உணர்கிறார்கள் என்றால், அவர்களுக்கு அற்புதங்கள் சம்பவிக்கின்றன.

அதே சமயம் தொடர்ந்து துன்பங்களில் மூழ்கியிருப்பவர்கள் அதிலிருந்து மீளவே முடியாத நிரந்தர சோகத்தில் இருக்கிறார்கள் என்றால், இவர்கள் தம்முடைய துன்பங்களுக்கெல்லாம் தாம் காரணமல்ல் பிறர்தான் என்று கருதி அந்தப் பிறரைத் தூற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். நமக்கு ஏற்படும் வெற்றி-தோல்விகள், சுக-துக்கங்கள் எல்லாமே படிப்பினைதான். சந்தோஷம் ஏற்பட்டால் துள்ளுவதும் துக்கம் ஏற்பட்டால் துவளுவதுமாகிய சராசரி மனித நிலையிலிருந்து மேலெழுந்து இரு தரப்பட்ட உணர்வுகளையும் ஒன்றேபோல் பாவித்து வாழ வேண்டியதுதான் இப்போதைய நம் தேவை.

இந்தப் படிப்பினையை ஒவ்வொருவரும் தத்தமது ஒவ்வொரு சம்பவத்தின் மூலமாகத்தான் அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அதற்கு இந்த ஜன்மம் போதாது. ஆகவேதான், நம் முன்னோர்கள், வீட்டிலுள்ள பெரியோர்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட அனுபவங்களை, அவற்றை அவர்கள் கையாண்ட முறைகளை, அதன்

பலன்களை, கூட இருந்து பார்த்தோ அல்லது கேட்டோ நம்முடைய வாழ்க்கை முறைகளையும் திருத் தியமைத்துக் கொள்ளும் வாய்ப்புகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால், இவை எல்லாவற்றையும் - முழு வாழ்க்கைத் தத்துவமாக -பகவான் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். அந்த உரைக்குப்பெயர்தான் பகவத்கீதை.

பகவத்கீதை என்றால் பகவானால் பாடப்பட்டது என்று பொருள் கொள்ளலாம். இந்த கீதை உபநிஷத்து க்களின் சாரம். இது மகாபாரத புராண த்தின் ஓர் அங்கம். ஆனாலும், ஓர் தனிஇறைநூலாகவே கொள்ளத்தக்க அம்சம். மகாபாரதத்தில் பீஷ்மபர்வம் பகுதியில் 25வது அத்தியாயம் முதல் 42வது அத்தியாயம் வரை பதினெட்டு அத்தியாயங்களில், %00 ஸ்லோகங்களாக பகவத்கீதை வைர அட்டிகையாக ஜொலிக்கிறது. ''பாரத: பஞ்சமோ வேத:' என்பார்கள். அதாவது, ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்களுக்கு அடுத்து ஐந்தாவது வேதமாக மகாபாரதம் கருதப்படுகிறது.

நான்கு வேதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஞானகாண்டம், கர்மகாண்டம் என்று இரு பகுதிகள் உண்டு. அதேபோல ஐந்தாவது வேதமான மகாபாரதத்திலும் பகவத்கீதை ஞான காண்டமாகக் கருதப்படுகிறது. ஞான காண்டம், தன்னை அறிதலை விளக்கும் ஒரு பகுதி. ஜீவாத்மா, பரமாத்மா, இவை தவிர உலக த்திலுள்ள அனைத்து உயிரினங்களையும் பற்றி தத்வார்த்தமாக அலசி ஆராயும் பகுதி. வேதங்களில் கூறப்படும் இந்தப் பகுதி உபநிஷத்து எனப்படுகிறது. ஆகவே மகாபாரதம் என்ற ஐந்தாவது வேதத்தில் பகவத் கீதை உபநிஷத் ஆகும்.

பகவத் கீதைக்கு உரை சொல்வது என்பது உரையாசிரியர்களின் ஆழ்மன புரிதலுக்கும், அவரவர்களுக்குத் தோன்றிய வகையில் விளக்குதலுக்கும் உட்பட்டது. இப்படி எழுதப்பட்ட உரைகள் மூவாயிரத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று கணக்கிடப்பட் டுள்ளது. அவரவர் மனப்போக்குப்படி, அவரவர் புரிந்து கொண்டுள்ள தன்மைப்படி பகவத் கீதைக்கு உரை எழுதப்பட்டாலும் அதன் அடிப்படை தத்துவத்தை மட்டும் யாராலுமே திரித்துக் கூற இயலவில்லை. அதற்குக் காரணம், பகவத் கீதை ஒரு வாழ்க்கை நெறி, எப்படி வாழ வேண்டும், வாழ்வின் அர்த்தம் என்ன என்பன போன்றவற்றைத் தெளிவாக விளக்கும் ஒரு வாழ்க்கைப் பாடம்.

பகவத்கீதை கங்கையைப் போல புனிதமானது. எத்தனையோ அசுத்தங்கள் கங்கையில் கலந்தாலும் கங்கை நீரின் புனிதம் எத்தனை வருடங்கள் ஆனாலும் குறைவதில்லை. அசுத்தங்களுடனேயே ஓடிக் கொண்டிருக்கும் கங்கையை ஒரு செம்பில் பிடித்து வைத்து எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு அந்தச் செம்பைத் திறந்து பார்த்தால் அது துர்நாற்றம் வீசுவதில்லை; மிகத் தெளிவாகவும், ஏன் சுவையாகவும்கூட இருக்கிறது. பகவத்கீதையும் அப்படி த்தான். எத்தனையோ உரை ஆசிரியர்கள் அவரவர் மனப்போக்குப்படி உரை சொல்லியிருந்தாலும், அது கீதையின் அடிப்படை தத்துவத்தையும், நோக்க த்தையும் மேம்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட உரையாசிரியர்களில் முதன்மையானவர்களாக மூவரைச் சொல்லலாம்: அத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றி ஸ்ரீசங்கரர், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றி ஸ்ரீராமானுஜர், த்வைத சி

த்தாந்தத்தைப் பின்பற்றி ஸ்ரீமத்வர். மொத்தத்தில் பகவத்கீதையின் பொருளை அறிவது ஒரு சுகம் என்றால், அந்த ஸ்லோகங்களை தினமும் பாராயணம் செய்ய முடியுமானால், அது பரமசுகம். அந்தப் பாடல்கள், இறைமந்திரங்கள். அவற்றை தினமும் உச்சரிப்பதால் நம் வாழ்வில் பல தர்ம நலன்கள் விளையும் என்பது உறுதி. எதிர்பார்ப்பு இல்லாத வாழ்க்கையே ஏற்றம் பெறும் என்பதை உள்ளீடாக உணர்த்துகிறது கீதை. ''ஆனால், எதிர்பார்ப்பு இல்லாவிட்டால் வாழ்க்கையே எதற்கு?' என்ற கேள்விக்கும் பதில் சொல்கிறது.



மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இந்த கீதை, பகவான் கிருஷ்ணனால் உரைக்கப்படுகிறது. நெருக்கடி சமயத்தில்தான் பகவான் அருள் வேண்டியிருக்கிறது, இல்லையா? தனக்கு இழைக்கப்பட்ட அநீதி, அவமானங்கள், புறக்கணிப்புகள் இவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் எல்லாம் மனசுக்குள்ளேயே இருக்கும்வரை அதற்குச் சரியான பதில் சொல்லவேண்டும், திருப்பித் தாக்க வேண்டும் என்ற வேட்கையும் கனன்று கொண்டே இருக்கும். தனக்கு எதிரான சம்பவங்களுக்கு உடனேயே எதிர்ச்செயல் புரிவது மனித இயல்புதான். ஆனால், அவ்வாறு செயல்புரிய இயலாதவாறு சூழ்நிலைகளும், உடனிருப்போரும் அமைந்துவிடும்போது அந்தத் தாக்கம் மனசில் கனம் ஏற்றிவிடும் என்பதும் இயல்புதான்.

பொறுமையாகக் காத்திருந்து காலம் வரும்போது அந்த கனத்தைப் பழிவாங்கல் மூலமாக வெளியேற்றிவிடவேண்டும் என்று காத்திருப்பதும் இயல்புதான். இந்தக் காத்திருப்பு காலத்தில், பழிவாங்கப்படவேண்டியவர் மீதான குரோதமும், விரோதமும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவதும் இயல்புதான். பழிவாங்கும் வாய்ப்பு கிட்டும்போது, தனக்கே பாதகம் விளைவிக்கக்கூடிய பின்விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் கொலை போன்ற செயல்களைச் செய்ய முற்படுவதும் இயல்புதான். இந்தக் கொடுஞ்செயல் எண்ணத்துக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளும், உடனிருப்போரும் போடும் தூபங்களும் காரணமாக அமைகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், அவ்வாறு பழிவாங்க முயலும்போது சிலசமயம் அறிவு விழித்துக்கொள்வதுதான்.


இப்படிப் பழிவாங்குவதால் எதை சாதித்துவிட முடியும் என்று அறிவு கேட்கும்போது பதில் சொல்ல மனசால் இயலுவதில்லை. பழிக்குப் பழி என்ற உணர்வில் இரு தரப்பிலும் சேதம்தான் மிச்சம் என்ற உண்மை தெரியவரும்போதுதான் அந்த உணர்வு எவ்வளவு மோசமானது என்பது புரிகிறது. ஆனால், இது தனிமனிதரிடையேயோ அல்லது இனத்தாரிடையேயோ, இரு சமூகத்தாரிடையேயோ ஏற்படும் பகைமைக்குப் பொருந்தலாம்;

ஆனால், போர் என்று வந்துவிட்டால், உரிமைக்கான போராக அது அமைந்துவிட்டால், ஆக்கிரமிப்புக்கும், ஆளுதலுக்குமான போர் என்று ஆகிவிட்டால், அங்கே பழி உணர்வுக்கு முதலிடம் கொடுப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இந்த கட்டத்துக்கு வந்துவிட்ட பிறகு, வேண்டியவர்-வேண்டாதவர், உறவினர்-உறவு அல்லாதவர் என்ற பாகுபாட்டுக்கு மனதை ஆட்படுத்தக்கூடாது. சமாதானத்துக்கோ, சமரசத்துக்கோ ஒத்துவராத நிலையில், நீயா-நானா என்று பார்த்துவிடும் போர்தான் இறுதியானது என்ற உச்ச கட்டத்துக்கு மனசு தயாராகிவிடும்போது, எதிர் உயிரைப் பலி வாங்குவது அல்லது தன் உயிரைத் தியாகம் செய்வது என்பது தான் அந்தப் போரின் தர்மமாகிவிடும். இதற்குத் தயங்குவதோ, பாச உறவுகளைக் காரணம் காட்டிப் போரிலிருந்து விலக முயற்சிப்பதோ கூடாது என்பதும் அதே போர் தர்மம்தான்! இத்தகைய மனக் குழப்பத்துக்கு பகவான் விடை தரும் சாக்கில் பல மனித தர்மங்களையும் விளக்கிப் புரிய வைக்கிறார். - பகவத் கீதையின் சாராம்சம் இதுதான். குருசேஷத்திர யுத்தத்துக்கான காரணத்தை ''சொத்துக்கான சண்டை' என்று வெகு சாதாரணமாக சொல்லிவிடலாம். ஆனால், சகோதரர்களிடையே ஏற்பட்ட அந்தத் தகராறு சூதாட்ட வெறியால் வளர்ந்தது என்பதுதான் அடிப்படை உண்மை. ஆகவே சூதாட்டம் என்பது எவ்வளவு பெரிய கொடிய, அநீதியான பழக்கம் என்பது புரிகிறது. விட்டதை மீட்கும் வேட்கையை சூதாட்டம் வளர்க்கிறது. ஆரம்பத்தில் நிறைய அபகரித்து விட வேண்டும் என்ற வேட்கையுடன் துவங்கும் இந்த ஆட்டம், இழப்பானால் மீட்கவும், வருமானமானால் மேலும் அதனைப் பெருக்கிக் கொள்ளவும் மனதைத் தூண்டுகிறது.

முதல் கட்டத்தில் பாண்டவர்களும், இரண்டாம் கட்டத்தில் கௌரவர்களும் உணர்ச்சி மேலிட சகுனித்தீயால் மேலும் மேலும் வன்மம் வளர்த்து சூதாட்டப் போரில் ஈடுபட்டார்கள். இழந்தவரை போதும்; இருப்பதைக் காத்துக் கொள்வோம் என்று பாண்டவர்கள் நினைத்திருந்தாலும் சரி, கிடைத்தவரை போதும்; இனிமேல் வேண்டாம் என்று கௌரவர்கள் நினைத்திருந்தாலும் சரி, மகாபாரதப் போர் மூண்டிருக்காது. தோல்வியே ஒரு போதை. குதிரைப்பந்தயம், லாட்டரிச்சீட்டு மற்றும் பிற சூதாட்டங்களில் ஆரம்பத்தில் ஈடுபடுபவர்கள் அதில் வெற்றி பெற்றுவிட வேண்டும், நிறைய பொருள் குவிக்க வேண்டும் என்ற பேராசை மிகுந்தவர்களாக இருப்பார்கள். ஆனால், நாளாவட்டத்தில் தோல்வியிலேயே சுகம் காண்பவர்களாகவும் அவர்கள் மாறிவிடுகிறார்கள். கழிவிரக்கம், சுயபரிதாபம் என்று தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு மேலும் மேலும் தோல்வியையே போதைப் பொருளாக அனுபவித்து வருகிறார்கள். திடீரென்று வெற்றி பெற்று விட்டாலும், அதை எடுத்துக்கொண்டு போய்ச் சேரலாம் என்ற அமைதி வந்துவிடாது. அவ்வாறு கிட்டிய மிகச்சிறிய அதிர்ஷ்டத்தையும் மீண்டும் சூதாடத்தான் மனம் விழைகிறது. அதாவது, இந்தத் தொகையை வைத்து ஆடுவதால், இதற்கு முன் இழந்ததையெல்லாம் மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கை காரணமாக அல்ல் மனத்தின் அடித்தளத்தில் தோல்விச் சுவை கண்டதன் தொடர்ச்சியாக இந்த சிறு லாபத்தையும் மீண்டும் இழந்துவிட ஆசைப்படும் மனநிலையினால்தான்!

அந்த வகையில் மேலும் மேலும் இழப்பையே அனுபவித்து வந்த தருமன், தோல்வி போதையில் சுகம் காண ஆரம்பித்தான் என்றே சொல்லவேண்டும். நாடு, பொருள், சொத்து என்று எல்லாவற்றையும் இழந்த பின்னரும் தோல்வியில் கண்ட சுகம், அவனை தம்பியரையும் இழக்க வைத்தது; ஏன், மனைவியையும் இழக்கும் துணிவைக் கொடுத்தது. மனைவியை இழந்ததில் அவன்தான் எவ்வளவு அவமானத்தை அனுபவித்தான்! துகிலுரியப்பட்ட கோலத்தில், எதிரிகள் எல்லாம் கைகொட்டிச் சிரிக்க, வலுமிகுந்த தம்பிகளும் செய்வதறியாது தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கூனிக்குறுகி அமர்ந்திருக்க, தருமன் பட்ட வேதனை அவனுடைய தோல்விச் சுகத்தின் உச்சம் என்றே சொல்லலாம்.



எல்லாவற்றையும் இழந்து, நாட்டைவிட்டு வெளியேறி, தலைமறைவாகி, உருமாற்றம் கொண்டு, அந்த அஞ்ஞாத வாசத்தினாலேயே ஞானோதயம் பெற்றான் தருமன். துரியோதனனுக்கு சகுனி உதவியது போல் தர்மனுக்குக் கிருஷ்ணன் உதவினான்.

எப்படி தீயவெறிக்கு சகுனி எண்ணெய் வார்த்தானோ, அதுபோல தருமநெறி துளிர்க்க கிருஷ்ணன் நீர் வார்த்தான். குருக்ஷேத்திரப் போர் தொடங்கியது. கௌரவ சேனைகள், மிகப் பெரியதொரு கடல்போலத் திரண்டிருந்தது. பீஷ்மரின் வழி நடத்துதலில் மிகுந்த உற்சாகத்து டன் கௌரவர்கள் படை நடை இட்டுச் சென்றார்கள்.

பீஷ்மர், கர்ணன், க்ருபாச்சாரியார், அஸ்வத்தாமன், விகர்ணன், கோமதத்தனுடைய மகனான பூரிச் ரவஸ் என்று வீர, தீர பராக்கிரமம் உடைய பலரும் அவர்களுக்குப் பின்னால் தத்தமது நெடிய சேனைகளுடன் அணிவகுத்து நின்றனர். பாண்டவர் பிரிவில், பஞ்சபாண்டவர் தவிர, காசி ராஜன், தேரோட்டுவதில் வல்லவனான சிகண்டி, த்ருஷ்டத்யும்னன், விராட தேசத்து அரசன், ஸாத்யகி, துருபதன், திரௌபதியின் பிள்ளைகள், சுபத்திரை குமாரன் அபிமன்யு மற்றும் எல்லோருக்கும் மேலாக கிருஷ்ணன் ஆகியோர் அணிவகுத்திருந்தனர்.

போர் துவக்கத்திற்கு அடையாளமாக துரியோதனர் பகுதியிலிருந்து குரு வம்ச த்தில் பெரியவரும், பாட்டனாருமான பீஷ்மர், வீர கோஷமிட்டு தன் சங்கை ஊதினார். அதனை வெற்றிச் சங்கொலியாகவே பாவித்து மகிழ்ந்தான் துரியோதனன். ஆனால், அது வெற்றுச் சங்கொலியாகப் போவதை அவன் மட்டுமல்ல, யாருமே உணரவில்லை. அவருடைய சங்கொலிக்குப் பிறகு பிற சங்குகளும், பேரிகைகளும் பேராரவாரம் செய்தன. எழுச்சியூட்டும் வகையில் தம்பட்டங்களும், பறைகளும் ஒலிக்க கொம்புகள் முழங்கின. இந்த ஆரவாரம் ஓரளவு குறைந்தபோது எதிர் அணியில் சூரிய ஒளி தோன்றியது.



# அப்பூதி அடிகள்

சோழமண்டலத்திலே, திங்களூரிலே பிராமணகுலத்திலே, பாவங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் நீக்கினவரும், புண்ணியங்களென்று சொல்லப்படவைகளெல்லாவற்றையும் தாங்கினவரும், கிருகஸ்தாச்சிரமத்தையுடையவரும், சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவருமாகிய அப்பூதியடிகணாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவானுபூதிமானாகிய திருநாவுக்கரசுநாயனாருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவர்மேலே மிக அன்பு கூர்ந்து, தம்முடைய வீட்டினுள்ள அளவைகள் தராசுகள் பிள்ளைகள் பசுக்கள் எருமைகள் முதலிய எல்லாவற்றிற்கும் இந்நாயனாருடைய பெயரையே சொல்லிவருவார். இன்னும் அவர் மேலாசையினாலே, திருமடங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் குளங்கள் திருநந்தனவனங்கள் முதலியனவற்றை அந்நாயனார் பெயரினாற் செய்து கொண்டிருந்தார்.

இருக்குநாளிலே, அத்திருநாவுக்கரசு நாயனார் திருப்பழனமென்னும் ஸ்தலத்தை வணங்கிக்கொண்டு பிறதலங்களையும் வணங்கும்பொருட்டு, அந்தத் திங்களூருக்குச் சமீபமாகிய வழியிலே செல்லும்பொழுது, ஒரு தண்ணீர்ப்பந்தரை அடைந்து, திருநாவுக்கரசுநாயனார் என்னும் பெயர் எங்கும் எழுதப் பட்டிருத்தலைக் கண்டு, அங்கு நின்றவர்கள் சிலரை நோக்கி, ''இந்தத் தண்ணீர்ப்பந்தரை இப்பெயரிட்டுச் செய்தவர்யாவர்'' என்று வினாவ் அவர்கள் ''இப்பந்தரைமாத்திரமன்று, இவ்விடத்தெங்கும் உள்ள அறச்சாலைகள், குளங்கள், திருநந்தனவனங்களெல்லாவற்றையும் அப்பூதியடிகணாயனாரென்பவர் இத்திருநாவுக்கரசுநாயனார் என்னும் பெயரலேயே செய்தனர்'' என்றார்கள். அதைத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டு, ''இங்ஙனஞ் செய்தற்குக் காரணம் யாதோ'' என்று நினைந்து, அவர்களை நோக்கி, ''அவர் எவ்விடத்

தில், இருக்கின்றவர்'' என்று வினாவ ''அவர் இவ்வூரவரே இப்பொழுதுதான் வீட்டுக்குப்போகின்றார், அவ்வீடும் தூரமன்று சமீபமே'' என்றார்கள். உடனே திருநாவுக்கரசுநாயனார் அப்பூதியடிகணாயனாருடைய வீட்டுத்தலைக்கடைவாயிலிற் செல்ல, உள்ளிருந்த அப்பூதிநாயனார் சிவனடியார் ஒருவர் வாயிலில் வந்து நிற்கின்றார் என்று கேள்வியுற்று விரைந்து சென்று, அவருடைய திருவடிகளிலேநமஸ்கரிக்க்அவரும் வணங்கினார். அப்பூதிநாயனார் ''சுவாமீ! தேவரீர் இவ்விடத்திற்கு எதுபற்றி எழுந்தருளினீர்'' என்று வினாவ திருநாவுக்கரசு நாயனார் 'நாம் திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு வரும்பொழுது, வழியிலே நீர் வைத்ததண்ணீர்ப்பந்தரைக்கண்டும் அப்படியே நீர் செய்திருக்கின்ற பிறதருமங்களைக்கேட்டும்' உம்மைக் காண விரும்பி, இங்கே வந்தோம்'' என்று சொல்லி, பின்பு, ''சிவனடியார்கள் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரிலே உம்முடைய பெயரை எழுதாது வேறொருபெயரை எழுதியதற்குக் காரணம் யாது'' என்று வினாவ் அப்பூதிநாயனார் ''நீர் நல்லவார்த்தை அருளிச்செய்திலீர், பாதகர்களாகிய சமணர்களோடு கூடிப் பல்லவராஜன் செய்த விக்கினங்களைச் சிவபத்தி வலிமையினாலே ஜயித்த பெருந்தொண்டரது திருப்பெயரோ வேறொருபெயர்'' என்று கோபித்து, பின்னும், பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்தலாலே இம்மையினும் பிழைக்கலாம் என்பதை என்போலும் அறிவிலிகளும் தெளியும் பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசுநாயனாருடைய திருப்பெயரை நான் எழுத, நீர் இந்தக் கொடுஞ்சொல்லை நான் கேட்கும்படி சொன்னீர். கற்றேராணியைக்கொண்டு கடல்கடந்த அந்த நாயனாருடைய மகிமையை இவ்வுலகத்திலே அறியாதார் யாருளர்! நீர் சிவவேடத்தோடு நின்று இவ்வார்த்தை பேசினீர். நீர் எங்கே இருக்கிறவர்? சொல்லும்'' என்றார்.

திருநாவுக்கரசுநாயனார் அவ்வப்பூதியடிகளுடைய அன்பை அறிந்து, ''ஆருகதசமயப் படுகுழியினின்றும் ஏறும் பொருட்டுப் பரமசிவன் சூலைநோயை வருவித்து ஆட்கொள்ளப்பெற்ற உணர்வில்லாத சிறுமையேன் யான்'' என்று அருளிச்செய்தார். உடனே அப்பூதிநாயனார், இரண்டு கைகளும் சிரசின்மேலே குவிய, கண்ணீர் சொரிய, உரை தடுமாற, உரோமஞ்சிலிர்ப்ப, பூமியிலே விழுந்து திருநாவுக்கரசுநாயனாருடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களைப் பூண்டார். திருநாவுக்கரசுநாயனார் அப்பூதியடிகளை எதிர்வணங்கி எடுத்தருள, அப்பூதியடிகள் மிகக் களிப்படைந்து கூத்தாடினார்; பாடினார்; சந்தோஷமேலீட்டினால் செய்வது இன்னது என்று அறியாமல், வீட்டினுள்ளே சென்று, மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கு, பிறசுற்றத்தார்களுக்கும் திருநாவுக்கரசுநாயனார் எழுந்தருளிவந்த சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லி, அவர்களை அழைத்துக்கொண்டுவந்து,

நாயனாரை வணங்கும்படி செய்து, அவரை உள்ளே எழுந்தருளுவித்து, பாதப்பிரக்ஷாளனஞ் செய்தார். அங்ஙனம் செய்த தீர்த்தத்தை அவர்களெல்லாரும் தங்கண்மேலே தெளித்து, உள்ளும் பூரித்தார்கள். நாயனாரை ஆசனத்தில் இருத்தி, விதிப்படி அருச்சனை செய்து, ''சுவாமீ, தேவரீர் இங்கே திருவமுது செய்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்திக்க் அவரும் அதற்கு உடன்பட்டருளினார். அப்பூதிநாயனார் திருவமுது சமைப்பித்து, தங்கள் புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசை வாழைக் குருத்து அரிந்து கொண்டு வரும்பொருட்டு அனுப்ப் அவர் விரைந்து தோட்டத்திற்சென்று, வாழைக் குருத்து அரியும்பொழுது, ஒரு பாம்பு அவருடைய கையிலே தீண்டி, அதனைச் சுற்றிக்கொண்டது. அவர் அதை உதறிவீழ்ந்து, பதைப்புடனே அது பற்றிய வேகத்தினாலே வீழுமுன் கொய்த குருத்தை வேகத்தோடு • கொண்டோடி வந்து, விஷம் முறையே ஏறித்தலைக்கொண்ட ஏழாம்வேகத்தினாலே பல்லுங் கண்ணும் சரீரமும் கருகித் தீய்ந்து உரை குழறி மயங்கி, குருத்தைத் தாயார்கையில் நீட்டி, கீழே விழுந்து இறந்தார். அதுகண்டு, தந்தையாரும் தாயாரும் ''ஐயோ! இது தெரிந்தால் இனி நாயனார் திருவமுது செய்யாரே'' என்று துக்கித்து, சவத்தை வீட்டுப் புறத்து முற்றத்தின் ஓர்பக்கத்திலே பாயினால் மறைத்து வைத்து விட்டு அப்பமூர்த்தியிடத்திற்சென்று ''சுவாமி, எழுந்து வந்து திருவமுது செய்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள் அப்பமூர்த்தி எழுந்து கைகால் சுத்தி செய்துகொண்டு, வேறோராசனத்தில் இருந்து, விபூதி தரித்து, அப்பூதிநாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் விபூதி கொடுத்து; புதல்வர்களுக்கும் கொடுக்கும்போது, அப்பூதிநாயனாரை நோக்கி ''நாம் இவர்களுக்கு முன்னே விபூதி சாத்தும்படி உம்முடைய சேட்டபுத்திரரை வருவியும்'' என்றார். அப்பூதிநாயனார் ''இப்போது அவன் இங்கே உதவான்'' என்றார். அப்பமூர்த்தி அதைக் கேட்டவுடனே சிவபிரானுடைய திருவருளினாலே தம்முடைய திருவுள்ளத்திலே ஒரு தடுமாற்றத் தோன்ற, அப்பூதிநாயனாரை நோக்கி, ''அவன் என்செய்தான்? உண்மை சொல்லும்'' என்றார். அப்பூதிநாயனார் அஞ்சி நடுங்குற்று, வணங்கி நின்று, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்தார். அப்பமூர்த்தி அதைக்கேட்டு, ''நீர் செய்தது நன்றாயிருக்கின்றது; இப்படி வேறியார் செய்தார்'' என்று சொல்லிக்கொண்டு எழுந்து, சிவாலயத்துக்குமுன் சென்று சவத்தை அங்கே கொணர்வித்து, விஷத்தை நீக்கியருளும் பொருட்டுப் பரமசிவன்மேலே திருப்பதிகம்பாடினார். உடனே அப்புத்திரர் உயிர்பெற்று எழுந்து; அப்பமூர்த்தியுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரிக்க் அப்பமூர்த்தி விபூதி கொடுத்தருளினார். அப்பூதிநாயனாரும் மனைவியாரும் தங்கள் புத்திரா பிழைத்தமையைக் கண்டும் அதைக்குறித்துச் சந்தோஷியாமல், நாயனார் திருவமுது செய்யாதிருந்தமையைக் குறித்துச் சிந்தை நொந்தார்கள். அப்பமூர்த்தி அதனை அறிந்து, அவர்களோடும் வீட்டிற்சென்று, அப்பூதி நாயனாரோடும் அவர் புத்திரர்களோடும் ஒருங்கிருந்து திருவமுது செய்தருளினார். அப்படியே சிலநாள் அங்கிருந்து, பின் திருப்பழனத்திற்குப் போயினார்.

அப்பூதியடிகள் சைவசமயாசாரியராகிய திருநாவுக்கரச நாயனாருடைய திருவடிகளைத்துதித்தலே தமக்குப் பெருஞ் செல்வமெனக்கொண்டு வாழ்ந்திருந்து, சிலகாலஞ் சென்றபின் பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார்.

உ
அம்பாள் துணை







# ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம். சுவெற்றா. ஜேர்மனி



## ஸ்ரீ கனகதுர்கை அம்பாள் ஆலயம்

## Sri Kanakathurka Ampal Tempel



**Sri Kanakathurka Ampal Tempel e.V.**
**Robert Koch Strasse 5**
**58239 Schwerte**
**Tel.: 02304 16 72 1**

**பூசை நேரங்கள்:**
தினமும் 18:00 மணிக்கு நித்தியபூசை
வெள்ளிக்கிழமை,
செவ்வாய்க்கிழமைகளில்
16:30 மணிக்கு அபிசேகமும்
18:00 மணிக்கு பூசையும்
நடைபெறும்.

**ஆலயம் திறந்திருக்கும் நேரம்:**
தினமும் 17:00 மணி முதல்
19:00 மணி வரை.
வெள்ளிக்கிழமை,
செவ்வாய்க்கிழமைகளில் 16:00 மணி
முதல் 19:00 மணி வரை.

விசேட பூசை நாட்களில் நேரம்
மாற்றமடையும்.

ஆலயகுரு:
"துர்க்காபூஜாதுரந்தரர்"
சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் ஜெயந்திநாதக்குருக்கள்
Tel.: 0 23 04 / 91 09 44 5
Mobil: 0177 201 69 41

வங்கி விபரம்:
Sri Kanakathurka Ampal Aalayam Schwerte e.V
Stadtsparkasse Schwerte
IBAN: DE 06 44 15 2490 0000 0 78998
BIC: WELADED1SWT

தொடர்புகளுக்கு:
0 23 04/25 68 939
0 23 04/91 05 587
0 23 04/22 590



# சைவத்திருமுறைகள் தொடரட்டும்

முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய் பின்னைப்புது மைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனாய் நிற்பவன் பரம்பொருளான சிவபெருமான். அவனைப் போலவே பழமையும் புதுமையும் பொலிவது சைவசமயம்.

திருமறை என்கிற ''வேதத்தைச் செய்தவன் இறைவன் சிவன். இது சைவசமயிகளின் நம்பிக்கை. வேதத்திற்கு ஆரம்பம் என்பது யாருமே சொல்லாதது. அப்படி ஒன்று இல்லை என்பதே சைவர்களின் நம்பிக்கை.

ஆனால் வேதத்தை இறைநூல் என்று ஏற்றுக்கொண்டாலும் கிறிஸ்துவ முகமதிய சமயங்கள் போலஇ அதுவே முடிந்த முடிவு என்றும் அதற்கு மேலே வேறுநூல் பிறத்தல் தவறென்றோ ஹிந்துக்கள் நம்பவில்லை.

இதனால் தான் ஸ்ருதிகளான வேதங்களைத் தொடர்ந்து ஸ்மிருதிகளும், புராணங்கள் இதிஹாசங்கள் ஆகமங்கள் தோத் திரங்கள் சாஸ்திரங்கள் தத்துவங்கள் என்றெல்லாம் நம் சமய நூல்கள் விரிந்தன. விரிகின்றன.முடிவின்றித் தொடர்கின்றன.

''இல்லாததொன்றிலிருந்து இருப்பது பிறவாது' என்பது சைவசித்தாந்தம். எனவே தான் இறைவாக்கின் தொடர்ச்சியாக ''மானிட வாக்கும்' சைவத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. வெளிப்படா நிற்கும் இறைவனே அநுபூதிமான்களின் வாயிலாய்ப் பேசுவதாய் அவை கொள்ளப்பட்டன. இவ்வாறு சைவர்கள் ஏற்றுப் போற்றியதால் தான் சைவநூல் வரிசை பல்கிப்பெருகிற்று. இதனால் பின் வந்த நூல்களும் முன் வந்த திருமறையாம் வேதத்திற்கு ஒப்பாய் வைத்துப் போற்றப்பட்டன.

தமிழிலக்கணமும் இறைவனே முதல் நூலோன் என்று கூறும் - வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல்நூலாகும் என்கிறது தொல்காப்பியம். இவ்வாறு தமிழோடு பின்னிப்பிணைந்து பிற்காலத்தில் தோன்றிய அருளாளர்களின் வாக்குகளையும் அதன் தகுதி கண்டு ஏற்றுப் போற்றிய திறனாலேயே சைவம் நிமிர்ந்து நிற்கிறது.

இன்றைக்கு திருமுறைகளை விடுத்து அதற்கு முந்தைய வேதாகமத்தை மட்டுமே சைவம் என்று சிந்திப்பது எவராலும் இயலாத ஒன்றேயாம். அப்படிச் சிந்தித்தால் அது சைவமாயும் தோன்றாது. இதனால் தான் தன்னை அழிக்க வந்த புறச்சமயங்கள் அழிந்து போக தானே வியாபகமாய் நிற்கும் வெற்றி உடையதாகச் சைவம் விளங்குகின்றது.

''தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா பின்பு தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா'
என்ற சித்தாந்த ஆசிரியர் உமாபதி

சிவாச்சார்யாரின் கருத்தும் இதனுடன் இணைத்து நோக்குதற்குரியது.

இதே போலவே இறைமறுப்பையும் கூட ஏற்றுக் கொள்ள வல்ல சைவத்தின் சீர்மையையும் பெருமையையும் அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன் என்ற சுந்தரர் திருவடிவகள் காட்டி நிற்பதாகச் சுட்டுவர் அறிஞர்.
இவ்வாறு தகுதி கண்டு எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் சைவத்திருமரபு இடையில் சில இடர்களுக்கு உள்ளாயிற்று. கட்டமைக்கப்பட்ட நிர்வாகவியலுக்கு உட்படுத்தப்பட்ட சமயங்களான கிறிஸ்துவம் போன்ற சமயங்களின் வருகையும் உலகியல் வளர்ச்சி வேகமும் சைவத்தையும் ஒரு எல்லைப்படுத்த வேண்டும் என்ற ஆவலை அவ்விடைக்காலத்தில் உருவாக்கியிருக்கலாம். சைவத்தின் மேற் கொண்ட அளவற்ற அக்கறையே இதற்கு காரணமாயிருந்த போதிலும் அது சைவத்திற்கு நன்மை தருவதாக இல்லை.

மற்றைச்சமயிகள் போல சீருடை ஒன்றைப்புனைந்து கொண்டு குறித்த ஒரு நாளில் ஒரு வேளையில் ஆலய வழிபாடாற்றல், ஒரு சமயத் தலைமைப் பீடம் என்பது போல உருவானதே இந்த திருமுறைகளை எல்லைப் படுத்தும் எண்ணமுமா என்பது ஒரு சிந்தனைக்குரியது.

தேவாரம் வேதசாரம் என்றும் திருவாசகம் உபநிடதசாரம் என்றும் யாழ்ப்பாணத்துக் காசிவாசி செந்திநாதையர் அவர்கள் அறுதி இட்டு உரைத்திருக்கிறார்கள். இப்படி அற்புதமான திருமறைச்சாரமாக அமைந்த தெய்வத் தமிழ்த் திருமுறைகள் எங்கும் சிதறிக் கிடந்தன. இவற்றை ஒரு ஒழுங்குக்கு கொண்டு வரவேண்டும் என்றும் அவை சைவசமயிகளின் புழக்கத்தில் வரவேண்டும் என்றும் எவரும் விரும்புவது இயல்பு. அது போலவே, இத்தொகுப்பினைச் செய்ய சோழப்பேரரசனான இராஜராஜன் விழைந்தான்.பிள்ளையார் பேரருள் பெற்ற நம்பியாண்டார்நம்பி அடிகள் அதற்கு உற்ற துணை செய்தார். அரசன் ஆணையை இறைவன் ஆணையாய் ஏற்று சிவப்பணியான திருமுறை தொகுப்புப் பணியை நம்பி அடிகள் செய்திருக்கிறார். பொல்லாப் பிள்ளையாரிடம் பாடம் கேட்ட அநுபூதிச் செல்வரான நம்பியாண்டார் நம்பிகள் சைவத் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தருளியிருக்கிறார்.

ஆனால் ஆய்வாளர்கள் சிலர் நம்பியாண்டார் நம்பி தொகுத்தது முதல் ஏழு திருமுறைகளையே என்று குறிப்பிடுகின்றனர்.. தேவாரத்தைத் தொகுப்பதே அவர் பணியாய் இருந்தது என்பது அவர்களின் வாதம். அதனாலேயே அவ்வேழு திருமுறைகளும் ''அடங்கன் முறை' என்று அழைக்கப்படுகிறது என்று அவர்கள் காட்டுகின்றனர். அவர்களின் கருத்தின் படி நம்பியடிகள்-இராஜராஜன் காலத்தின் பின்காலத்தின் தேவை உணர்ந்தே எட்டாம் ஒன்பதாம் பத்தாம் பதினோராம் திருமுறைகள் தொகுக்கப்பட்டதாக குறிப்பிடுவர். ஆனால் உமாபதி சிவாச்சார்யார் பாடியருளிய ''திருமுறை கண்ட புராணத்தில்' பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பியடிகளே தொகுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எவ்வாறோ இது ஒரு அரசபணியாகவே நடந்தேறியிருக்கிறது. விரவிக்கிடந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் ஒன்று சேர்ப்பதும், அவற்றைத் தொகுப்பதும், தொகுப்பதற்குரிய நிதிப்பங்களிப்பினைச் செய்வதும், அத்தொகுதியை சைவ உலகில் பரவச் செய்வதும் அக்காலத்தில் அரசனால் அன்றி மற்றோரால் ஆகவல்ல காரியமல்ல.

அடுத்த இதழில் தொடரும்....

குழந்தைகளே!,
கீழே உள்ள படத்திற்கு உங்களுக்குப் பிடித்தமான
வர்ணங்களை பூசி அழகு பாருங்கள்.



திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, , 3008 Bern, Switzerland
☎ 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch
facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

# வழிபாட்டுநாட்காட்டி

*வாரத்தில் 7 நாட்களும் காலை 08.00 மணிமுதல் 20.30 மணிவரை திருக்கோவில் திறந்திருக்கும்.*
*மாலை 18.30 மணிமுதல் 20.00 மணிவரை வழிபாடு இடம்பெறும்.*

## கன்னி (புரட்டாதி)

| | |
|---|---|
| 01.09.15 செவ்வாய்க்கிழமை | வைரவர்மடை, மாலை 17.00 மணிமுதல் |
| 17.09.15 வியாழக்கிழமை | விநாயகர் நான்மை (சதுர்த்தி) வழிபாடு, மாலை 16.00 மணிமுதல் |
| 19.09.15 சனிக்கிழமை | 1 ஆம் கன்னித்திங்கள் காரிநோன்பு, காலை 08.00 மணிமுதல் |
| 26.09.15 சனிக்கிழமை | 2 ஆம் கன்னித்திங்கள் காரிநோன்பு, காலை 08.00 மணிமுதல் |
| 27.09.15 ஞாயிற்றுக்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |

## துலை (ஐப்பசி)

| | |
|---|---|
| 03.10.15 சனிக்கிழமை | 3 ஆம் கன்னித்திங்கள் காரிநோன்பு, காலை 08.00 மணிமுதல் |
| 10.10.15 சனிக்கிழமை | 4 ஆம் கன்னித்திங்கள் காரிநோன்பு, காலை 08.00 மணிமுதல் |
| 13.10.15 செவ்வாய்க்கிழமை | ஒட்டிரவு சக்திவழிபாடு (நவராத்திரி) நோன்பு தொடக்கம், மாலை 17.00 மணிமுதல் |
| 17.10.15 சனிக்கிழமை | 5 ஆம் கன்னித்திங்கள் காரிநோன்பு, காலை 08.00 மணிமுதல் |
| 22.10.15 வியாழக்கிழமை | வெற்றிநற்திருநாள் (விஜயதசமி), கேதாரகௌரி; நோன்பு தொடக்கம், மாலை 17.00 மணிமுதல் |
| 27.10.15 செவ்வாய்க்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |

## நளி (கார்த்திகை)

| | |
|---|---|
| 10.11.15 செவ்வாய்க்கிழமை | தீபாவளி, மாலை 17.00 மணிமுதல் |
| 11.11.15 புதன்கிழமை | கேதாரகௌரி; நிறைவு, மாலை 17.00 மணிமுதல் |
| 12.11.15 வியாழக்கிழமை | கந்தசட்டி நோன்பு தொடக்கம், மாலை 17.00 மணிமுதல் |
| 16.11.15 திங்கட்கிழமை | கந்தசட்டி நோன்பு, வேல் வழங்கல் மாலை 17.00 மணிமுதல் |
| 17.11.15 செவ்வாய்க்கிழமை | கந்தசட்டி நோன்பு, சூரன்போர் மாலை 17.00 மணிமுதல் |
| 18.11.15 புதன்கிழமை | கந்தசட்டி நோன்பு நிறைவு பாறணை, காலை 07.00 மணிமுதல், ஞானலிங்கபாலன் மணவினைத் திருநாள் (திருக்கல்யாணம்), மாலை 17.00 மணிமுதல் |
| 25.11.15 புதன்கிழமை | சர்வாலயதீபம், முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 26.11.15 வியாழக்கிழமை | விநாயகர் கதை நோன்பு தொடக்கம், மாலை 18.00 மணிமுதல் |
| 27.11.15 வெள்ளிக்கிழமை | நளித்திங்கள் ஈகை வெள்ளி, மாலை 18.00 மணிமுதல் |



11வது
ஆண்டில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
European Tamil Radio
ETR
24மணி நேர வானொலிச் சேவை
தொலைபேசியில் வானொலியைக் கேட்டுமகிழ:
Germany: 0221 98 88 014 - Swiss: 044 51 33 0 45
France: 01 80 14 06 59 - England: 0330 332 6349
Denmark: 078 77 25 27 - Canada: 647 496 9717
USA: 979 282 4059 - Australia: 02 8072 5194
www.etr.fm